மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1972) திருப்பி அனுப்பப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி; "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3 ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1972) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1972 ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு--ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1972.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மேலவைத் தலைவர் அவர்களே, 'சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு--ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1972) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இச்சட்ட வரைவை முன்மொழிகையில் 1956-ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின் மூலம் (மத்தியச் சட்டம் 37/1956) முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து இம்மாநிலத்திற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் சில சிறப்பு நில உரிமை முறைகள் நிலவி வந்தன என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். "திருப்புதார்கள்", "ஜென்மிகள்" போன்ற இடையாட்கள் சிலருடைய உரிமைகளை ஒழிப்பதற்காகக் கீழ்க்காணும் சிறப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) தமிழ்நாடு 1964-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) ரயத்துவாரி நில ஏற்பாட்டுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1964).

(2) 1964-ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபண்டாரவாகா நிலங்கள் (ஒழித்தல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1964).

@ 389-412 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 25] [திரு. ப. உ. சண்முகம்]

(3) தமிழ்நாடு 1964-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) திருப்புவாரம் கொடுத்தல் ஒழிப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/1964).

(4) தமிழ்நாடு 1964-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) ஜென்மீகரம் கொடுத்தல் ஒழிப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/1964.)

இம்மாவட்டத்தில் திருவாங்கூர் மன்னர் குடும்பத்திற்குச் சொந்தமான ஸ்ரீபாதம் நிலங்கள் எனப்படும் மற்றொரு வகையைச் சேர்ந்த நிலங்கள் உள்ளன. 588.39 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த நிலங்கள் இம்மாவட்டம் முழுவதும் பரந்துள்ளன. இந்த நிலங்களுக்கு அடிப்படை நில வரியினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால் ' ராஜபோகம் ' எனப்படுகிற சலுகை வரி வீதங்களில் இவற்றிற்கு வரி விதிக்கப்படுகிறது. இவ்வரியை இந்த நில வுடைமையாளர்கள் செலுத்தவேண்டும். ராஜபோகத்தைத் தவிர்த்து, இந்த நிலவுடைமையாளர்கள் ஸ்ரீபாதம் நிலச்சொந்தக்காரர்களுக்கு ரொக்கமாகவோ, தானியமாகவோ குத்தகையும் செலுத்தவேண்டும். ஸ்ரீபாதம் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக்கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு கோயில் களும் பேணிவரப்படுகின்றன. இம்மாவட்டத்தில் ஸ்ரீபாதம் நில உரிமை முறையை நீக்கிவிட்டு, இந்த நிலங்களை நில அளவை செய்து நிலவரி ஏற்பாட்டு அலுவல்களை நிறைவேற்றிய பின்னர் நில உடைமையாளர்களுக்கு ரயத்து வாரிப் பட்டா வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இச் சட்ட வரைவு, மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது. இந்தத் தீர்மானத்தை இம்மேலவை ஏற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி;

“ சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு கன்னியா குமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு--ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1972) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ”.

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக, எடுத்துக்கொள்ளப்பட்டது.

(பரிந்துரைகள் இல்லை.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, “ சட்டப் பேரவை யில் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை

சட்ட முன்வடிவு எண் 38/1972) திருப்பி அனுப்பப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி; "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு--ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1972) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1972).

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப் படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு@ (சட்ட பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

*** திரு. கே. ராஜாராம்:** இது விவாதத்திற்குரிய விஷயமில்லை. இருந்தாலும் ஒரு சந்தேகம். 50 பஸ்களுக்கு மேல் உள்ளதை அரசாங்கம் ஏற்கும்போது, அதில் பணியாற்றும் ஊழியர்களுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியை அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நஷ்ட ஈட்டிலிருந்து பிடித்துக்கொள்ள வேண்டும். எந்த தேதியில் பஸ்களை ஏற்கிறோமோ, அந்த தேதிவரைக்கான பாக்கிகளைப் பிடித்துக்கொள்ள வேண்டும். இதற்கு சட்டம் தேவைதானா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரை, அவர்களுக்கு இருக்கும் பாக்கியைப் பிடித்துக் கொள்ள வழிவகை

@ 413-414-ஆம் பக்கங்களில் இணைப்பு IX- ஆக அச்சிடப்பட்டுள்ளது.